நடவடிக்கை எடுத்திருக்கிறது. திரு. நெடுமாறன் அவர்களும் இன்னும் சிலரும் போராட்டம் நடத்துவதற்காகக் கூடியபோது, அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் தீர்மானத்தின் நகலை எரிக்கவில்லை. ஆகவே, அவர்கள் மாலையில் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆனால், இன்னும் சிலர் தீர்மானத்தின் நகலை எரித்திருக்கிறார்கள். அவர்கள்மீது Unlawful Activities Prevention Act பிரிவு 10-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்கள் கைது செய்யப்பட்டு, ரிமாண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, தீர்மானத்தின் நகலை எரித்தவர்கள் விடுதலை செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) அறிமுகப்படுத்தும் சட்டமுன்வடிவுகளுக்கான நகலை உறுப்பினர்களுக்கு உரிய நேரத்தில் வழங்கக் கோரல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான சட்டமுன்வடிவுகள் இன்றைக்கு இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் படிப்பதற்குக்கூட நேரம் கிடைப்பதில்லை. நேற்றைக்கு இரவு 12 மணிக்குப் பிறகு ரூம்களின் நடையிலே போட்டுவிட்டுப் போய் இருக்கிறார்கள். காலையிலே 7 மணிக்குத்தான் அவற்றைப் பார்க்க முடிகிறது. இதெல்லாம் இன்றைக்கே அறிமுக நிலையிலேயே ஏற்றுக்கொள்ளக்கூடிய சட்டங்கள்கூட....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. ஏற்கெனவே இவையெல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன. அஜெண்டா-தான் இப்போது அனுப்பியிருக்கிறோம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: இன்றைக்கு University Bill ஒன்று தாக்கல் செய்யப்படவிருக்கிறது. இப்போது இங்கே டேபிளில்தான் வைக்கப்பட்டிருக்கிறது. அதுவொரு முக்கியமான சட்டம். இதெல்லாம் போதுமான அளவு........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிமுகம்தான். ஹேமச்சந்திரன், அது அறிமுகம்தான். ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுவது நாளைக்குத்தான்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: இல்லை, இல்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலேயே ஏற்கெனவே பேசப்பட்டது. தேர்தல் முடிந்ததற்குப் பிறகு சில

2002 மே 9] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

விஷயங்களை வைத்துக்கொள்ளலாம் என்பதாகும். அவசர அவசரமாக இப்படிப்பட்ட சட்டங்களை — இன்றைக்கு — 7½ மணி வரை சபை நடக்கிறது. அதற்குப் பிறகு இதைப் — படித்து அடுத்த நாள் விவாதிப்பது ரொம்ப சிரமமான விஷயமாக இருக்கிறது. இந்தமாதிரியான சட்டங்களை ஆய்வு செய்வது என்பதை சௌகரியமாக பின்னாலே வைத்துக்கொள்ள வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) University Bill எல்லாம் இந்த நாட்டிலே இருக்கிற மாணவர்களுடைய எதிர்காலத்தைக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய சட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. இன்றைக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது. அதுபற்றிய விவரங்கள் உங்களுக்கு வரும். படித்துவிட்டுச் சொல்லுங்கள்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

வாணியம்பாடி காவல் நிலையத்தில் குறவர் இனப் பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதாகக் கூறப்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாணியம்பாடி காவல் நிலையத்தில் காவல் துறையினர், குறவர் இனப் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்துள்ளது குறித்து திரு. சி. ஞானசேகரன், திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. டி. மணி, திரு. இ. புகழேந்தி, திரு. எ.வ. வேலு ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானமாக அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். செல்வி க. பாலபாரதி, திரு. ஐ. கணேசன் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பிற்கு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். திரு. ஜி.கே. மணி, திரு. ப. ரங்கநாதன், திரு. இரா. திருமாவளவன், திரு. தி. வேல்முருகன் ஆகியோர் கவன ஈர்ப்புக்கு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்கிறேன். தீர்மானத்தை மட்டும் சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. இ. புகழேந்தி.

முற்பகல் 11-30

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கருமாந்தப்பட்டி பஞ்சாயத்தில் உள்ள இளச்சூர் கிராமத்தைச் சேர்ந்த ஆனந்தன் என்பவரை, ஒரு வழக்கிற்காக விசாரணைக்கு அழைத்துச்சென்று அவரைப் பார்ப்பதற்காக, பிறகு